பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
20 11 2023 **MONDAY** 7 15 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியில் கல்வி முக்கியப்பங்கு வகிப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. பிஜேபி அரசு பொறுப்பேற்ற பின்னர் நாட்டு நலனுக்காக அர்ப்பணிப்புடன் பாடுபடுபவர்களுக்கு மட்டுமே பத்ம விருதுகள் வழங்கப்படுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. தமிழ் பாரம்பரியத்தை நாம் அனைவரும் பாதுகாக்க வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.
4. தமிழகத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஆசிய ஜூனியர் ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

---- *இனி விரிவான செய்திகள்* ----

பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியில் கல்வி முக்கியப்பங்கு வகிப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலத்தின் குலியானாவில் ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளியை இன்று அவர் தொடங்கிவைத்து உரையாற்றினார்.

அப்போது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கல்வியை வழங்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

மூன்று நாள் பயணமாக ஒடிசா சென்றுள்ள திருமதி. திரௌபதி முர்மு பாரிபடாவில் நடைபெற்ற சண்டலி மொழி எழுத்தாளர்களுக்கான வருடாந்திர மாநாட்டில் கலந்துகொண்டார்.

அப்போது அடுத்த தலைமுறை குழந்தைகளுக்காக சண்டலி மொழியில் பல புத்தகங்கள் எழுதப்பட வேண்டும் என்று எழுத்தாளர்களை அவர் கேட்டுகொண்டார்.

இந்த மாநாட்டில் சண்டலி மொழியில் பேசிய குடியரசுத்தலைவர் அம்மக்கள் தமது தாய்மொழியை நேசிக்க வேண்டும் என்றும் அதனை பிரபலபடுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் கூறினார்.

சண்டலி மக்களின் வரலாறு மற்றும் பாரம்பரியத்தை பாதுகாப்பதில் அம்மொழி எழுத்தாளர்கள் சிறப்புடன் செயல்பட்டு வருவதாக திருமதி. திரௌபதி முர்மு புகழாரம் சூட்டினார்.

ஒடிசா, மேற்குவங்கம், சத்தீஸ்கர், ஜார்கண்ட் மற்றும் அண்டை நாடுகளான பங்களாதேஷ், நேபாளத்தில் 70 லட்சத்ததுக்கும் மேற்பட்டோர் சண்டலி மொழி பேசிவருவது குறிப்பிடத்தக்கது.

**<<<<>>>>**

வளர்ச்சியை செயல்படுத்தும் அரசே தற்போது ராஜஸ்தானுக்கு தேவை என்று பிஜேபியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் சட்டப்பேரவை தேர்தலையொட்டி **Pali** மற்றும் **Pilibanga**-வில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் இன்று அவர் கலந்துகொண்டார்.

ராஜஸ்தானில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாநில அரசு ஊழல் மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டுவருவதாக அவர் குற்றம்சாட்டினார்.

ஏழை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நலிவடைந்தவர்களின் பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்திவருவதாக திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

**<<<<>>>>**

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், நாட்டு நலனுக்காக அர்ப்பணிப்புடன் பாடுபடுபவர்களுக்கு மட்டுமே பத்ம விருதுகள் வழங்கப்படுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த விருதுகள் வழங்கும் நடைமுறையில் வெளிப்படைத்தன்மை முழுமையாக கடைபிடிக்கப்படுவதாக கூறினார்.

வளர்ச்சிக்கு மட்டுமே பிஜேபி முக்கியத்துவம் அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

ஊழலற்ற நிர்வாகத்தை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

பிஜேபி தேசிய தலைவர் திரு. ஜே.பி. நட்டா, மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திருமதி. ஸ்மிருதி இரானி, திரு. பியூஷ் கோயல் மற்றும் உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யாநாத் உட்பட பல தலைவர்களும் இன்று பிரச்சாரம் மேற்கொண்டனர்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே இன்று ஸ்ரீகங்கா நகர் மற்றும் ஹனுமன்ஹார்க் பகுதிகளில் பிரச்சாரம் செய்தார்.

அப்போது, அம்மாநிலத்தில் காங்கிரஸ் அரசு பல்வேறு சாதனைகளை செய்துள்ளதாகவும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்மாநில முதலமைச்சர் திரு. அஷோக் கெலாட், காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திருமதி. பிரியங்கா காந்தி வத்ரா, திரு. சச்சின் பைலட், திரு. கண்ணயாகுமார் உட்பட பலர் இன்று பிரச்சாரம் மேற்கொண்டனர்.

<<<<>>>>

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், ஆஸ்திரேலிய துணை பிரதமரும், அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சருமான திரு. ரிச்சட் மார்லஸ்-உடன் புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மற்றும் ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Penny Wong**-உடன் இணைந்து இவ்விரு அமைச்சர்களும் இன்று மாலை பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

முன்னதாக திரு. **Penny Wong**-உடனான சந்திப்புக் குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள டாக்டர் ஜெயசங்கர், இந்தோ – பசிபிக் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்தும் மேற்காசியா நிலவரம் தொடர்பாகவும் தங்களது கருத்துகளை பறிமாறிகொண்டதாக தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் இறுதிப்போட்டி குறித்தும் விவாதித்தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்தியா உடனான ஆசியான் அமைப்பின் உறவு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று அதன் பொது செயலாளர் டாக்டர் **Kao Kim Hourn** தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியா தலைநகர் ஜகார்த்தாவில் இந்திய பத்திரிக்கையாளர்கள் குழுவை அவர் இன்று சந்தித்து பேசினார்.

30 ஆண்டுகளாக தொடரும் இந்தியா – ஆசியான் உறவில் தற்போது குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எதிர்காலத்தில் டிஜிட்டல் பொருளாதாரம், சுற்றுலா, கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு உட்பட பலவற்றில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற உள்ளதாகவும் ஆசியான் பொதுச்செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

திரைப்படம் மற்றும் கேளிக்கை துறை வர்த்தகத்தில் உலக அளவில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளதாக ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

சர்வதேச திரைப்பட விழாவை சற்றுமுன் கோவாவில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதில், திரைப்படம் மற்றும் கேளிக்கை துறை முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

விரைவில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றும், அப்போது திரைப்படம் மற்றும் கேளிக்கை துறை வர்த்தகத்தில் மூன்றாவது நாடாக இந்தியா திகழும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், சர்வதேச திரைப்படங்களின் சிறப்பினை உணரும் வகையில் **Flim Bazaar** என்னும் தளத்தையும் திரு. அனுராக் தாக்கூர் தொடங்கிவைத்தார்.

ஒன்பது நாட்கள் நடைபெறவுள்ள இந்த விழாவில் 270 திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

இந்த விழாவில் மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன், கோவா முதலமைச்சர் திரு. பிரமோத் சாவந்த் மற்றும் திரையுலக பிரபலங்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

தமிழ் பாரம்பரியத்தை நாம் அனைவரும் பாதுகாக்க வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று மதுரையில், உலக மரபு வார விழாவை முன்னிட்டு நடைபெற்ற புகைப்பட கண்காட்சியை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

குடவறை கோயில்களில் உள்ள கல்வெட்டுகளுக்கும், தமிழ்மொழி, ஆன்மிகம், இலக்கியம் ஆகியவற்றுக்கும் தொடர்பு உள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

தேசிய மருந்து ஆணைய மசோதா தொடர்பான கருத்துக்களை பொதுமக்கள் தெரிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த வரைவு மசோதா சுகாதாரத்துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மருந்து சட்டத்திற்கு மாற்றாக இந்த மசோதா கொண்டுவரப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய மருந்து ஆணையத்தை ஏற்படுத்துவதற்கும் இந்த மசோதா வகை செய்வதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

சீர்காழியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சிறந்த நூலகர்களுக்கான விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

நூலகங்களின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**<<<<>>>>**

வங்கக்கடலில் நிலவும் வளிமண்டல கீழ் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் திரு. பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் பாலச்சந்திரன் 40 செகண்ட்)*

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு இதுவரை 16 சதவீதம் குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

*(சவுண்ட் பைட் பாலச்சந்திரன் 13 செகண்ட்)*

**<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ஜூனியர் ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

உஸ்பெகிஸ்தானின் **Tashkent** –ல் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் **Shahin Rajakbhai** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 100 கிலோ எடைப்பிரிவில் **Vishal**-ம், மகளிர் 52 கிலோ எடைப்பிரிவில் **Nungshithoi Chanu**–வும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

**<<<<>>>>**

ஆசிய பாரா வில்வித்தை போட்டியில், இந்தியாவின் **Sarita** வெண்கலப்பதக்கம் வென்றார்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் பிரிவில் **Rakesh Kumar-**ம், மகளிர் பிரிவில் **Sheetal Devi-**யும் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

**<<<<>>>>**

உலக **Wushu** சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Roshibina Devi** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் டெக்சாஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளதன் மூலம், வெண்கலப்பதக்கத்தை உறுதி செய்துள்ளார்.

**>>>>>END<<<<<**